ந.க.எண். 1987/2008 அ1

பேரூராட்சிகள் ஆணையரகம்,
குறளகம், சென்னை – 108.

நாள் : 02.07.2008

**சுற்றறிக்கை**

பொருள் : பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – பேரூராட்சி செயல் அலுவலர்கள் – இடமாறுதல் – அறிவுரைகள் வழங்கப்பட்டது – சில மண்டலங்களில் பின்பற்றப்படாமை – முழுமையாக முறையாக பின்பற்ற அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

பேரூராட்சி நிர்வாக அமைப்பின் கீழ் தலைமை அலுவலராக இயங்கி வரும் செயல் அலுவலர்கள் இடமாறுதல் தொடர்பாக கடிதங்கள் மூலமாகவும், ஆய்வுக் கூட்டங்களின் வழியாகவும் தொடர்ச்சியாக இவ்வாணையரகத்திலிருந்து பல அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. ஒரு பேரூராட்சி செயல் அலுவலர் அரசால் அளிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படியான காலக்கட்டத்திற்கு தொடர்ந்து பணியாற்றினால் மட்டுமே, ஸ்திரத்தன்மை / நிலைத்தன்மை / நிரந்தரமான ஒழுங்குமுறை (Regularity, Consistence and stability) ஏற்பட்டு, நல்லனுபவம் ஏற்பட வாய்ப்புள்ளது. அவ்வாறு பெறப்படம் அனுபவம் காரணமாக அப்பேரூராட்சி அமைப்பு அவ்வப்போது சந்திக்க நேரிடும் பல்வேறு பிரச்சினைகள் உடனுக்குடன் நன்முறையில் தீர்க்கப்பட சாத்தியக்கூறுகள் உள்ளதோடு, அதன்மூலம் பேரூராட்சி நிர்வாக அமைப்பும் சீராகவும் செம்மையாகவும் இயங்கும் (Systematic function). ஆகவே தகுந்த, தவிர்க்க முடியாத காரணங்களின் அடிப்படையில் மட்டுமே பேரூராட்சி செயல் அலுவலர்கள் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாறுதல் அளிக்கப்படவேண்டும். ஆனால், சில மண்டலங்களில் பேரூராட்சி செயல் அலுவலர்கள் எந்தவிதமான நியாயமான காரணங்களின்றி அடிக்கடி இடமாற்றம் செய்யப்படுவதாக அலுவலர்கள், மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட பல நிலைகள் வழியாக இவ்வாணையரகத்திற்கு தெரிய வருகிறது. பிரிவு

**2.** இவ்வாறு எவ்விதமான நியாயமற்ற காரணங்களினால் பேரூராட்சி செயல் அலுவலர்கள் அடிக்கடி இடமாற்றம் செய்யப்படுவதால், தொடர்பு விடுபட்டு, திட்ட வேலைகள் சுணக்கம் மற்றும் பேரூராட்சி பணிகள் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகிறது. எனவே, இப்பொருள் தொடர்பாக ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின் அடிப்படையில் செயல் அலுவலர்கள் ஸ்திரத்தன்மை பாதுகாக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. அம்முடிவிற்கு குந்தகமேற்படும் வகையில் மாறுதல் அளிக்கும்படி பிற வழிகள் வழியாக நிர்பந்தம் வரப்பெறின் நிர்பந்தம் ஏற்படுவதற்கு காரணமாக பணியாளர்கள் மீது தமிழ்நாடு அரசுப்பணியாளர் நன்னடத்தை விதிகளில், விதி எண். 18–ன்படி உரிய ஒழுங்கு நடவடிக்கை தொடரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**3.** இன்றியமையாத காரணங்களின் அடிப்படையில் மாறுதல் அளிக்கும்படியான நேர்வு இருப்பின், அதன்பேரில் உரிய நடவடிக்கை தொடரும்படியும், அவ்வாறு மாவட்ட ஆட்சியரால் அளிக்கப்படும் மாறுதல் உத்திரவு கண்டிப்பாக தலைமை அலுவலகத்திற்கு நகலிடப்பட்டு தெரிவிக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. மாவட்ட ஆட்சியர்களால் அளிக்கப்படும் மாறுதல் உத்திரவுகள் குறித்து பேரூராட்சிகள் ஆணையரகத்தில் கண்காணிப்பு செய்யப்பட்டு வருகிறது. எனவே, வருங்காலங்களில் பேரூராட்சி செயல் அலுவலர்கள் மாறுதல் உத்திரவு ஏதும் கவனத்திற்கு கொண்டு வரப்படாமல் இருப்பின், அது குற்றமாகக் கருதப்பட்டு உரிய மேல்நடவடிக்கை தொடரப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. பேரூராட்சி செயல் அலுவலர்கள் எந்தவிதமான காரணங்களின்றி மாறுதல் அளிக்கப்பட்டாலும், பொறியியல் பிரிவின் கீழ் இயங்கிவரும் பொறியாளர்களை பணிவிடுவிப்பு செய்யப்பட்டாலும் ஒழுங்கீனமாக கருதப்படும்.

4. எனவே, இந்நேர்வு தொடர்பாக ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள அறிவுரைகளைக் கவனத்திற்கொண்டு, செயல் அலுவலர்களின் ஸ்திரத்தன்மையை பாதுகாக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதன்மூலம் பேரூராட்சியிலுள்ள பொதுமக்களுக்கு அளிக்கப்படும் வசதிகள் மேம்படுவதுடன், திட்டப்பணிகள் முன்னேற்றம், பேரூராட்சி நிர்வாக பணியமைப்பு பணிகள் தேக்கமின்மை ஆகியவற்றுடன் பேரூராட்சி நிர்வாக அமைப்பு முறையாக இயங்க வழிவகுப்பதோடு பேரூராட்சியின் வடிவம் (Image) மேன்மேலும் பொலிவுடன் திகழும்.

5. இச்சுற்றறிக்கை கிடைத்தமைக்கு ஒப்புதலினை உடன் அனுப்பி வைக்கும்படி அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**ஒம்/– கே. கோபால்,**
ஆணையர்

பெறுநர்
அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்
அனைத்து பிரிவு கண்காணிப்பாளர்கள்